பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 75 நாள் : 09.04.2025

**மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் புதிய கால்பந்து விளையாட்டு மைதானம் மற்றும் பல்நோக்குக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் இன்று (09.04.2025) திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு-71, பெரம்பூர் நெடுஞ்சாலை (தெற்கு), ஜமாலியா பகுதியில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ், ரூ.1.25 கோடி மதிப்பில் 18,905 சதுர அடி பரப்பளவில் செயற்கை புல்தரையுடன் அமைக்கப்பட்ட கால்பந்து விளையாட்டு மைதானத்தைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்த மைதானத்தில் 5 உடற்பயிற்சி உபகரணங்கள், மின்விளக்கு கம்பங்கள், ஃபோகஸ் விளக்குகள், கலை வண்ணத்துடன் கூடிய சுற்றுச்சுவர், மைதானத்தைச் சுற்றிலும் இன்டர்லாக் தரைப்பகுதி ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, வார்டு-74க்குட்பட்ட சந்திரயோகி சமாதி சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ், ரூ.17.65 இலட்சம் மதிப்பில் 450 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள பல்நோக்குக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.தாயகம் கவி, துணை ஆணையாளர்கள் திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., (பணிகள்), திரு. கே. ஜெ. பிரவீன் குமார், இ.ஆ.ப., (மத்திய வட்டாரம்), மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் திருமதி புனிதவதி எத்திராசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**